**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 127/2020**

**Deposition of Witness for : PW 2**

**Name** **:** திரு. சரளா
**Father Name** **:**
**Village** **:**
**Taluk** **:**
**Caste** **:**
**Calling** **:**
**Religion** **:**
**Age** **:**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-10-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது செல்லங்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது சென்னை மதுரவாயிலில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என் கணவர் பெயர் சிவா, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் நான் சென்னை மதுரவாயிலில் இருந்து என் தாய் வசிக்கும் செல்லங்குப்பம் கிராமத்திற்கு வந்தேன். என் கணவர் மீது சிறு சிறு திருட்டு வழக்குகள் இருப்பதால் என் கணவருடன் செல்லங்குப்பம் கிராமத்திற்கு வருவதால் எதிரி காளி என்பவர் என் கணவரின் தகவலை பற்றி சென்னை போலீசாருக்கு சொல்லுவார், அதனால் அவருக்கும் என் கணவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது. எனது கணவருக்கும் எதிரி காளிக்கும் இருந்த பிரச்சனையில் என் கணவர் காளி என்பவரின் கையில் பிளேடால் வெட்டி விட்டார். அதனால் என் கணவர் ஜெயிலுக்கு சென்று விட்டார். ஜெயிலில் இருந்து வெளியே வந்து என் தாய் வீட்டிற்கு என் கணவருடன் செல்லங்குப்பத்திற்கு வந்தேன். கன்னட மாநிலத்தில் வசித்து வரும் செல்லங்குப்பத்தை சேர்ந்த குப்பம்மாளிடம் என் கணவர் 3 சவரன் நகையையும், பணம் 10 லட்சமும் கொடுத்து வைத்து இருந்தார். அதனை பெற்றுக் கொள்வதற்காக குப்பம்மாள் வரச்சொல்லி இருந்தார். அவரது வீட்டிற்கு என் கணவர் சென்றார். எதிரிகள் அனைவரும் என் தாயார் வீட்டில் என் கணவரை இரண்டு மார்புகளில் குத்தி, கழுத்தை அறுத்து, கட்டை மேல் வைத்து கிருஷ்ணாயில் ஊற்றி கொளுத்தி விட்டார்கள். நான் அப்போது சென்னையில் இருந்தேன். பாண்டியன் என்பவர் மொபைல் மூலம் என்னை தொடர்பு கொண்டு கூறினார். நான் உடனே என் தாய் வீட்டிற்கு வந்து பார்த்த போது என் கணவரின் உடல் பாதி எரிந்த நிலையில் இருந்தது. தலைப்பகுதி எரியவில்லை.

அப்போது லதா, குப்பம்மாள் ஆகியோர்கள் மற்றவர்கள் துணை கொண்டு ஆள் வைத்து கொலை செய்து கிருஷ்ணாயில் ஊற்றி கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

சம்பவம் நடக்கும் போது நான் சென்னையில் இருந்தேன், அதனால் எனக்கு நேரடியாக தெரியாது. என் கணவர் திருட்டு வழக்கில் புழல் சிறையில் ஜெயிலில் இருந்தார். என் கணவர் பெயரில் பூந்தமல்லி, திருவேற்காடு, திருமுல்லைவாயில், ஆவடி, அம்பத்தூர் எஸ்டேட்டில் தலா 3 திருட்டு வழக்குகள் இருந்தது. என் கணவர் மீது 100க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகள் இருந்தது என்றும், அதில் காழ்ப்புணர்ச்சி காரணமாக யாரோ என் கணவரை கொலை செய்து விட்டார்கள் என்றும், எதிரிகளுக்கும் என் கணவரின் கொலைக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி காளிக்கும், என் கணவருக்கும் எந்த வித முன் விரோதமும் இல்லை என்றால் சரியல்ல. குப்பம்மாளிடம் என் கணவர் நகைகளையும், பணத்தையும் கொடுத்து வைக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், போலீசார் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாத நிலையில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பணம், நகை தருவதாக குப்பம்மாள் என் கணவரை வரச்சொல்லியதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சரளா

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.